★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 வைகாசி 10 ஷஃப 10 இதழ் 102

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24—5—83

காந்தீயம் ராஜசுந்தரம்

## ஆட்கொணர்வு மனுவை எதிர்த்து ராணுவம் மனு

(கொழும்பு)

பனாகொடை ராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள காந்தீய அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜசுந்தரத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரும் ஆட்கொணர்வு மனுவுக்கு எதிரான ஆட்சேப மனுவொன்று நேற்று ராணுவத்தினர் சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

லெப்டினன்ட் யசீமேவ சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவில், திரு. ராஜசுந்தரம் அரசாங்க சட்டவைத்திய அதிகாரியிடம் தெரிவித்திருப்பது போல் சிறையில் வைத்து எவராலும் தாக்கப்படவில்லையென்றும் இம்சைப்படுத்தப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ராஜசுந்தரத்தைப் பார்க்க சட்டத்தரணிகள் முகாமுக்குச் சென்றபோது தாம் அவர்களை அங்கிருந்த அதிகாரி பேச விடவில்லையென்றும், இரகசிய பொலிசாரே விசாரணை நடத்தியதால்தான் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் எஸ். எஸ். கி. சந்திரகாசன், எஸ். குமாரலிங்கம் ஆகிய இருவரும் இந்த ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

நீதிபதிகள் எஸ். டி தம்பையா, ஜி பி. எஸ்

(8ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு

# புனைகால்நடைபண்ணையில் வெளிமாவட்டத்தவர் நியமனம்

## அபிவிருத்தி சபையில் தலைவர் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புனைப் பண்ணை அமைக்கப்பட்ட கால்நடைப் பண்ணையில் பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 56 பேர்தொழிலாளராக நியமனம் பெற்றுள்ளனர். மட்டக்களப்புச் சுங்கக் காவலாளிகளாக வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இருவர் நியமனம் பெற்றுள்ளனர்.

புதிய சபாமண்டபத்தில் நேற்று ஆரம்பமான மட்டக்களப்பு அபிவிருத்தி சபைக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கி சம்பந்தமூர்த்தி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் செ. மிராசன்லெப்பை ஆகியோரும் கலந்து கொண்டனர். உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யு, தேவநாயகம், பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

புதிய சபா மண்டபத்திற்கு தமது அமைச்சு மூலம் தளபாடங்கள் வழங்கியதற்காக அமைச்சர் செ.இராசதுரையை தலைவர் திரு. சம்பந்தமூர்த்தி பாராட்டினார்.

திரு சம்பந்த மூர்த்தி மேலும் கூறியதாவது;

'மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கம் வழங்கும் நியமனங்கள் யாவும், உள்ளூர் வாசிகளுக்கே வழங்கப்படவேண்டும் என்று மட்டக்களப்பு அபிவிருத்தி சபையில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் அமுல் செய்யப்படுவதாகக் காணப்படவில்லை. வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுவருகிறது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

கடந்த மாதம் நடந்த அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் மீரான் லெப்பை, உள்ளூர் வாசிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றும், இது தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்றும் வேலைவாய்ப்பில் உள்ளூர்வாசிகளுக்கே நியமனம் வழங்கப்படவேண்டுமென்றும் ஒரு பிரேரணை கொண்டுவந்து அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அத்தீர்மானம் அமுல்நடத்தப்படவில்லை''

வாழைச்சேனை காகித ஆலையின் புனைப் பண்ணையை மகாவலி அபிவிருத்தி சபையினரால் கையளிக்கப்பட்டு கால்நடைப்பண்ணை ஒன்று அமைக்கப்பட்டது. அதில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பலத்த ராணுவப் பாதுகாப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் கார், ஜீப் தீ வைப்பு மற்றும் சம்பவங்களை அடுத்து அங்கு இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து இரும்புக் கவச இராணுவ வாகனங்கள் பெருமளவில் வீதிகளில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இரவு வேளைகளில் இராணுவத்தினரும், பொலிசாரும் ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வீதிகளில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுவோரை கைது செய்கின்றனர்.

(சூ)

மட்டுநகரில், ஜீப், கார் தீக்கிரை

## காவலாளி சரண்

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு நெல்சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான ஜீப்பும் புதிய காரும் எரிக்கப்பட்டது சம்பந்தமாக தேடப்பட்டுவந்த இரவுக் காவலாளியான மா. இராஜசிங்கம் என்பவர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

[8-ம் பக்கம் பார்க்க]

கந்தர்மடம் அகதிகளுக்கு

## லயன்ஸ் நிதி: ஒருவர்மட்டும் ரூ. 10 ஆயிரம் நன்கொடை!

[யாழ்ப்பாணம்]

கந்தர்மடத்தில் நிர்க்கதிக்குள்ளான மக்களுக்கு உதவுவதற்காக யாழ். லயன்ஸ் கழகம் ஆரம்பித்துள்ள நிதிக்கு மேலும் பலர் ஆர்வத்துடன் உதவ முன்வந்திருக்கின்றார்கள்.

நேற்றுக் காலையில் 'ஈழநாடு' காரியாலயம் தேடி வந்த பெயர் விளம்பரத்தை விரும்பாத அன்பர் ஒருவர் 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை வழங்கிவிட்டுச் சென்றார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக மேலும் உதவிகள் புரியத் தாம் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். லயன்ஸ் கழகத்தின் முயற்சிக்கு வட்டுக்கோட்டை சாவகச்சேரி லயன்ஸ் கழகங்களும் உதவிபுரிய முன்வந்துள்ளன;

துப்பாக்கி முனையில்

## மல்லாவி ஆசிரியைகள் விடுதியில் கொள்ளை

(துணுக்காய்)

துணுக்காய் வவுனிக்குளம் பகுதியில் தங்கச்சங்கிலிகள், தோடுகள், வளையல்கள், ரொக்கப்பணம் ஆகியன துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி 30,000 ரூபா எனத் தெரியவருகிறது.

மல்லாவி மகா வித்தியாலய ஆசிரியைகள் தங்கியிருக்கும் விடுதியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. திருமணமான, திருமணமாகாத ஆசிரியைகள் எல்லாமாக ஆறு பெண்கள் அவ்விடுதியில் தங்கி வந்தனர். அன்றைய தினம் அவர்கள் எல்லாரும் இரவு உணவை முடித்து நித்திரைக்கு சென்றுவிட்டனர். இரவு சுமார் 12 மணிக்கு யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு, கதவை திறந்தபோது துப்பாக்கி, கத்தி, கம்பியுடன் ஐந்தாறு பேர் விடுதிக்குள் சென்று அவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றனர்.

கொள்ளையின்போது திருமணமான பெண்ணொருவரின் தாலிக்கொடியும் கொள்ளையர் வசம் சிக்கியபோது அந்தப் பெண் கொள்ளையரை தனது தாலியைத் தருமாறு கெஞ்சி அழவே தாலியைமட்டும் கழற்றிக்கொடுத்துவிட்டுச் சென்றனர்

அத்துடன் தாம் அடுத்த ஆசிரியர் விடுதிக்குச் செல்லுவதாகவும் ஒருவரும் சத்தம் போடக்கூடாது என்றும் பயமுறுத்தி ஒரு கொள்ளையன் காவல்நிற்க, மற்றவர்கள் அருகி

[8ம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளத்தில் இளைஞர் சுடப்பட்டுமரணம்!

(வவுனியா)

நேற்று முன்தினம் இரவு ஏழு மணிக்குச் செட்டிகுளம் சந்தியில் இனந்தெரியாத இளைஞர்களால் பிலிப் மரியதாஸ் என்ற இருபத்தாறு வயது இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுடப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இவர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற சமயம் மரணமானார்,

செட்டிகுளம் சந்தியில் இந்த வாலிபர் தமது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது, இரண்டு பேர் வந்து இவரைத் தனியாகக் கூட்டிக்கொண்டு சிறிது தூரம் சென்றதாகவும், பின்னர் இவர் ஓடியபோது, துப்பாக்கியால் அந்த இளைஞர்கள் இவரைச் சுட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

வவுனியா பொலிஸ் அதிபர் திரு. ஏ. ஜெயரட்ணம், உதவிப் பொலிஸ் அதிபர் ஜனாப் நிஸாம் ஆகியோர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காணி விற்பனைக்கு

தோட்டமும் நிலமும் சிறுப்பிட்டியில் மிதியன் நில பரப் 14½ தனிக்கிணறு தனிப்பாதையுடன் விற்பனைக்குண்டு.

சிறுப்பிட்டியில் இராமி கட்டளை நில பர.24 தனிக்கிணறு, சுற்றுமதில், 3பேஸ் மின்சாரவசதி. தொழிற்சாலைக்கும் ஏற்றஇடம்.

விபரங்கட்கு: K M.K. & SONS,

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

7338

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ், ஆங்கில புதிய, பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி - சங்கர் காட்டி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 7011

HONDA—MB 8 மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை நேரில் பார்வையிடலாம். சி. பத்மநாதன், 124, பருத்தித்துறை வீதி (ஆனைப்பந்தி உபதபாற்கந்தோருக்கு பக்கத்தில்) ஆனைப்பந்தி. (7332)

## பிறந்ததின வாழ்த்து



### தர்மினி

கிளிநொச்சி 8-ம் வாய்க்கால் 16-ம் இலக்கத்தைச் சேர்ந்த அல்லை தர்மநாதன்-புஷ்பலீலா தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்மினி தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (24-05-83) குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவர் சகல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென பாப்புகளம் நாகபூஷணி அம்மன் பேரால வாழ்த்துவோமாக. [7334]


# அண்ணாமலைமீது தாக்குதல்: நவசமசமாஜக்கட்சிகண்டனம்

(யாழ்ப்பாணம்)

''எமது கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளரும், அரசியல் குழு அங்கத்தவருமாகிய கந்தசாமி அண்ணாமலை கடந்த 13ம் திகதி சில இளைஞர்களால் தாக்கப்பட்டார். பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் எமது கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்களை வாபஸ் பெறும்படி அவர்கள் வற்புறுத்தினர்கள். திரு. அண்ணாமலை இதற்கு உடன்பட மறுத்ததுடன், தமிழர் விடுதலை கூட்டணியினர் தேர்தலை பகிஷ்கரிக்காதவரை நாம் தேர்தலில் போட்டியிட்டே தீருவோம் என்று கூறியிருந்தார். தாம் இனிமேலும் தாக்குதல் நடாத்த வருவதாகக்கூறி அந்த இளைஞர்கள் சென்றுவிட்டனர்.''

இவ்வாறு திரு. அண்ணாமலை இளைஞர்களால் தாக்கப்பட்டது தொடர்பாக நவசமாஜக்கட்சி பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''தமிழ்மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவதை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களில் அண்ணாமலை முன்னணியில் நின்று வந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழர் விடுதலை கூட்டணியும் பாராளுமன்ற தேர்தலையோ, உள்ளூராட்சி தேர்தலையோ பகிஷ்கரிக்க இணக்கம் தெரிவித்தால் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் எமதுகட்சி முன்னணி

[7-ம் பக்கம் பார்க்க]


## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28-5-1932

உதிர்வு 23-5-1979

பேராசிரியர் சோமசுந்தரம் செல்வநாயகம்

நின் பிரிவினால் தினமும் துயருறும்

அன்பு மனைவி: தயா,

புதல்வர்கள்: பாபு, மோகன், கண்ணன்,

புதல்வி: நிரு.

''செல்வம்''. 123, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (7331)

வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

TFC

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23680

COLOMBO Studio


# "நெடுந்தீவில் மகளிர் குழுக்களால் சிறந்தபலன்"

(நெடுந்தீவு)

''கடந்தவருடம் நெடுந்தீவு மகளிர் குழுக்கள் காட்டிய உற்சாகத்தினாலும் ஆர்வத்தினாலும் இப்பகுதியிலுள்ள பெண்கள் பலர் சிறுதொழில் பயிற்சிகளைப்பெற்று தமது வருவாய்க்கு வழி தேடியுள்ளனர்.

இவ்வாறு நெடுந்தீவு கோட்டைக்காடு பகுதியில் நடைபெற்ற மகளிர் குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திருமதி த. முத்துப்பிள்ளை கூறினார். அவர் மேலும் தமது உரையில் நெடுந்தீவு ப. நோ. கூ. இயக்குனர்சபை எடுத்து வரும் பயனுள்ள திட்டங்கள் இத்தீவகத்தின் வறுமைநிலை விரட்டியடிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு ப. நோ. கூ. ச. முகாமையாளர் திரு. இரா. தருமலிங்கம் பேசுகையில் தொழில் அபிவிருத்திக்கான கடனுதவிகளை வழங்க தாம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் எனவே மகளிர் குழுக்கள் இவ்வசதிகளைப்பயன்படுத்தி பயனடைய வேண்டுமென்றார்.

இக்கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றினர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கி)

# காந்தீயத் தலைவர்கள் முகாம்களில் சித்திரவதை

## வவனியா அ. ச. கண்டனம்

(வவனியா நிருபர்)

பனாகொடை இராணுவ முகாம்களில் வைத்து காந்தீயத் தலைவர்கள் சித்திரவதை செய்யப்படுவதை வவனியா மாவட்ட அபிவிருத்தி சபை மிகவும் வன்மையாகக் கண்டித்து சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு எம். சிற்றம்பலம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை கூடியது சபைத் தலைவரே பிரேரணையைக் கொண்டு வந்தார். கூட்டணி உறுப்பினர் ஜனாப் ஜமால்தீன் வழிமொழிந்தார். வவனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரம் இங்கு பேசுகையில் கூறியதாவது:-

''காந்தீயத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபின் பல சமூகப்பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இவர்களை விடுதலை செய்யும்படி ஜனாதிபதிக்குத் தந்தி அனுப்பினேன். பல தர்ம நிறுவனங்கள் இவர்களை விடுதலை செய்யும்படி வேண்டுகோள் விடுத்தன. எதற்கும் பதிலில்லை.

காந்தீயத் தலைவர்கள் பனாகொடை இராணுவ முகாமில் மிகவும் படுமோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இவர்கள் என்ன பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவில்லை. ஏதேனும் குற்றம் செய்திருந்தால் சாதாரண சட்டத்தின்முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்கலாம். இவர்கள் மீதான சித்திரவதை உடன் நிறுத்தப்பட வேண்டும். காந்தீயத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.''

தீர்மானம் நிறைவேறியது. (அ)


## வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

## வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 4000 வெற்றுச்சாக்குகள் (நாலாயிரம்) விற்பனைக்குண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/-ம் மீளத்தராத பணமாக ரூபா 5/-ம் சங்கக் காரியாலயத்தில் 27-5-83-ந் திகதிக்கு முன் கட்டி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை 29-5-83-ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுதபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விண்ணப்பிக்கும்போது என் பலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்,

வலிகிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,

[7333] அச்சுவேலி.


# புதிய நிர்வாகிகள்

(வண்ணார்பண்ணை)

இந்து இளைஞர் பேரவையின் சிறப்பங்கும் இளைஞர் மன்றத்தின் மண்டைதீவுக் கிளையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ஆ. சச்சிதானந்தபிள்ளை, செயலாளர்: திரு சி. பாலசிங்கம், பொருளாளர்: திரு. இ. நா. இராசசிங்கம். பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

மண்டைதீவில் இந்து கலாசார மண்டபமொன்றைக் கட்டுவதற்குப் பிரதேச அமைச்சிடம் நிதியுதவி கோருவதென்ற தீர்மான மொன்றும் இது தொடர்பான பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்து இளைஞர் பேரவைப் பிரதிநிதிகளாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# உற்சவம்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு நெல்லண்டைப்பத்திரகாளி அம்பாள் ஆலயவருடாந்த ''வெளிமடை'' உற்சவம் கடந்த 16ம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இவ்வெளிமடை உற்சவத்தில் பெருந்திரளானபக்த அடியார்கள் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றனர்.


அ. சொக்கலிங்கம்
144, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த சிவபாதம் பெண் சிவகாமசுந்தரியின் மரண சாதன விடயமாக:
(மரணமெய்தியவர்)

மரணசாதன நியமாதிக்கம் ) இல. 3717/T

சோமசுந்தரம் சிவபாதம்,
வட்டுக்கோட்டை கிழக்கு.
மனுதாரர்

மனுதாரின் சட்டத்தரணி

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாள் அன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

தா. குலஞானம்,
பதிவாளர்

அ. சொக்கலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
7328

யாழ். மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

இன்றே உங்கள் பிரயாண சீட்டுகளை யாழ். நகரிலேயே பதிவுசெய்ய நாடுங்கள்

'குறொஸ் ட்ரவல் சேவிஸ் (பிறைவேற்) லிமிட்டெட்' ஸ்தாபனத்தை.

(1) கொலனிட் வழியாக இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள், கனடா, ஜேர்மனி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான பிரயாண சீட்டுகள்,

(2) பிரயாணிகள் காசோலை, VISA (விசா) (3) விசா, (VISA)

மற்றும் சகல பிரயாண ஒழுங்குகளுக்கும், பிரயாண அனுபவமிக்கவர்களின் இலவச ஆலோசனைகளுக்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள் எங்கள் குளிரூட்டப்பட்ட அலுவலகத்தை. நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

CROSS TRAVEL SERVICE (P.T.E.) LTD.

நவீன சந்தை, 2ம் கட்டிடம், 5, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22040, 22065. (7293)

ஈராக், மத்திய கிழக்கிற்கு

# 600 இந்தோனேஷியர்களை அனுப்பிவைக்க ஏற்பாடு!

லண்டன், மே 23

இந்தோனேஷியா 600 மாலுமிகளை ஈராக்கிற்கும் மத்திய கிழக்கிற்கும் அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளைச்செய்து வருகிறது.

இவர்கள் 43 லட்சம் அமெரிக்க டாலரை தாய் நாட்டுக்கு அனுப்பிவைப்பார்கள்.

ஈராக் செல்லும் மாலுமிகள் மத்தியில் இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் பேசுகையில், மாலுமிகள் மாதாந்தம் 750 அமெரிக்க டாலரை ஊதியமாகப் பெறுவார்களென்றும் இவற்றில் 80 சத வீதத்தை வீட்டிற்கு அனுப்பிவைப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

வருடாந்தம் 43 லட்சம் டாலரை இவர்கள் அனுப்பிவைப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

1000 இந்தோனேஷியர்கள் சவூதி அரேபியாவிலுள்ள எண்ணெய்க்குதங்களில் வேலை செய்துவருகின்றார்கள். இவர்களும் தாய்நாட்டிற்கு 80 சத வீத வேதனத்தை அனுப்பி வருகின்றார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் 50,000 இந்தோனேஷியர்கள் வேலைசெய்வது குறிப்பிடத்தக்கது. (ஃ)

---

துருப்புக்கள்

## வாபஸ் பற்றி பேச்சுவார்த்தை

லண்டன், மே 23

துருப்புக்களை வாபஸ் பெறுவது தொடர்பாக கிரியா பேச்சுவார்த்தை நடாத்த முன்வரும் என லெபனன் எதிர்பார்ப்பதாக லெபனன் வெளியுறவு மந்திரி தெரிவித்தார். (ஃ)

---

## கடனுதவித் திட்டத்தின்கீழ் உதவி வழங்க ஏற்பாடு

(நெடுந்தீவு)

அரசாங்க ஊழியர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு கடனுதவித்திட்டத்தின் கீழ் சங்கம் அவர்களுக்குச் சில உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதுடன் சிறுதொழில்களுக்கான கடனுதவிகளைப் பொதுமக்களுக்கு அளிக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் நெடுந்தீவில் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இளம்பெண்கள் தொழில்துறைகளில் ஆர்வம் காட்டி வருவதற்கு எமது மாதர் குழுக்களே காரணமாகும். அவர்களுக்கு சமைய நடைமுறைகளிலும் தொழில் பயிற்சிகளிலும் கூடிய அறிவைப்பெறத்தக்கதாகக் கல்விச் சுற்றுலா ஒன்றை ஏற்படுத்தவும் ஒழுங்குகள்செய்யப்படும்.

இவ்வாறு திருமதி த. முத்துப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நெடுந்தீவு மாதர் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். இராமச்சந்திரன் கூறினார்.

சங்க நெறியாளர் திரு. இ. தருமரத்தினம் தனது உரையில் பாவனையாளர்கள் கிளைகளின் நடவடிக்கைகளை அவதானிக்கவேண்டும் என்றும் தவறுகள் காணுமிடத்து நிருவாகத்தினரிடம் சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் சங்கம் தனது எல்லைப் பரப்பில் நேர்மையாக பணிபுரிய உதவவேண்டும் என்றும் கூறினார்.

விசேடசேவை அலுவலர் திரு. ந. நடராசா கிளைகளின் மூலம் கடன் உதவிகளை வழங்கி அனைத்து மக்களும் பயன்பெற உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். முதலாம் இரண்டாம் வட்டாரத்திற்கான மாதர்குழுப் பிரதிநிதியாக செல்வி க. இந்திராணி நியமிக்கப்பட்டார். கல்வி உத்தியோகத்தர் செல்வி டெய்சி அக்பிரட் உட்படப்பலர் உரையாற்றினர்கள். (ஃ)

---

தென்னாபிரிக்காவின்

# இனஒதுக்கல் கொள்கைக்கு கண்டனம்!

லண்டன், மே 23

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்கு பல்கேரியா கண்டனம் தெரிவித்துள்ளது.

நமீபியா மற்றும் சுதந்திரத்திற்குப் போராடும் நாடுகளுக்குத் தமது நாடு ஆதரவு அளிக்கும் எனப் பல்கேரியா வெளியுறவு மந்திரி தெரிவித்துள்ளார்.

சுதந்திர நாடுகளை ஆக்கிரமித்துவரும் தென்னாபிரிக்கா கொள்கைக்கு பல்கேரியா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. [ஃ]

---

# நுழைவுவரிதிரும்ப பெறப்பட மாட்டாது

## தமிழக முதல்வர் அறிவிப்பு

சென்னை, மே 23

சர்ச்சைக்குரிய நுழைவு வரியைத் திரும்பப் பெறுவதில்லை எனத் தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் ஈரோட்டில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வர்த்தகர்களுக்கு இந்த வரி மூலம் சிரமம் ஏற்படாதென்றும் அவர் உறுதியளித்தார்.

இம்மாதம் 30-ம் திகதி இவ்விடயமாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளைச் சென்னையில் சந்திக்கவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

15 ஆண்டுகளுக்கு முன் தொழில்துறையில் முன்னணியிலிருந்த தமிழ்நாடு இன்று பின்தங்கியுள்ளதாக திரு. ராஜிவ் காந்தி தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த தமிழ்நாடு முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், இக்கருத்தை அவர் வெளியிட முன்னர் மாநில அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியிருக்கவேண்டுமென்று கூறினார். (ஃ)

---

ரயில் வண்டிகளில்

# ''குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவேண்டும்'

சென்னை, மே 23

ரயில் வண்டிகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த மாநில அரசுகள் சட்ட அமுல் ஏஜன்சிகளை முடுக்கிவிடவேண்டும் என மத்திய ரயில் மந்திரி திரு. கனிக்கான் செளத்திரி மாநில முதல்வர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாநில அரசுகள் ஒத்துழைப்பு வழங்கினால் ரயில்களில் குற்றச்செயல்களைத் தடுக்கமுடியுமென்றும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சமூகவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துவருவதையிட்டு அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

சமூகவிரோத சக்திகளை முறியடிக்கத் தீவிரமான இயக்கங்களை மாநில முதல் அமைச்சர்கள் ஆரம்பிக்கவேண்டுமென்றும் அவர் கடிதத்தில் கேட்டுள்ளார்

பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாவிட்டால் ரயில் பிரயாணிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கமுடியாமல் போகும் என்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். [ஃ]

---

## பேராசிரியர் நல்லையா எழுதிய நூல்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கே. நல்லையா அவர்களால் ''இலங்கையில் கல்வியும், மனித உரிமைகளும்'' என்ற தலைப்பில் எழுதப்பெற்ற நூல் 26-ந் திகதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

'மறையும் சமூகம்' தொடர்பான கிறிஸ்தவ இயக்கத்தின் சார்பில் இந்நிகழ்ச்சி இடம்பெறும். திரு. ஐ. பி. துரைரத்தினம் தலைமை வகிப்பார்.

---

## விபத்தில் 5 பேர் காயம்

சென்னை, மே 23

திருநெல்வேலியில் கடலூருக்கருகில் நடந்த கார் விபத்தில் கர்நாடக இசை வித்துவான் கோவிந்தராஜா உட்பட 5 பேர் காயமடைந்தனர். (ஃ)

---

'தமிழர் விடுதலைக் கூட்டணி

# இலட்சிய வேட்கைமிக்க ஒருவிடுதலை இயக்கம்''

[திருகோணமலை]

''தமிழர்விடுதலைக்கூட்டணி இலட்சிய வேட்கை மிக்க ஒரு விடுதலை இயக்கம். தேர்தல் பெறுபேறுகள் இதனைமேலும் உறுதிப்படுத்தி உள்ளன.''

திருகோணமலை நகரசபைத் தேர்தல் முடிவுகளை உதவி தேர்தல் ஆணையாளர் திரு. விக்டர் சமரவீர அறிவித்ததும் அங்கு குழுமியிருந்தோர் மத்தியில் உரையாற்றிய புதிய நகரசபைத்தலைவர் திரு. இரா. விக்கினேஸ்வரன் இவ்வாறு கூறினார். திருகோணமலை மாவட்ட சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை, அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணாண்டோ ஆகியோரும் நகர மண்டபத்தில் சமுகமளித்திருந்தனர்.

''திருகோணமலை நகராண்மைக் கழகக் கூட்டணி நிர்வாகம் கட்சிப்பாகுபாடு காட்டாமல், இன, மத, மொழி வேறுபாடு இன்றி நீதி அடிப்படையில் செயற்படும் என்று திரு. இரா. விக்கினேஸ்வரன் உறுதி அளித்தார்.

சுதந்திரக்கட்சியின் உறுப்பினராகத் தெரிவாகிய திரு. தயானந்த அபயவீரா பேசுகையில் திருகோணமலை நகரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் புதிய நகராண்மைக் கழக நிர்வாகம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தமது ஆதரவு உண்டு என்று கூறினார். ]ஃ]

---

கொல்லவேண்டாமென

# கைகூப்பித் தொழுதபோதும் சந்தேகநபர் சுட்டாராம்

(திருக்கோணமலை)

தன்னைக் கொல்லவேண்டாமெனக் கைகூப்பி, இறந்தவர் தொழுது வேண்டிய போதுப் சந்தேகநபர் காலஞ்சென்றவரைச் சுட்டுக் கொன்றார்.

தம்பலகாமம் நாயன்மார் திடலில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மரணமான வைரமுத்து செல்லத்தம்புவின் மரணவிசாரணையைத் திருகோணமலை நீதிபதி திரு. சரத் டீ ஆப்ரு நடாத்திய போது மேற்கண்ட தகவல் வெளியானது.

இறந்த செல்லத்தம்பு தனது மகள் இந்திராணியைத் தலைமயிர் வெட்ட வீதியால் அழைத்துச் செல்கையில் சந்தேகநபர் நவரத்தினம் உருத்திரமூர்த்தி துப்பாக்கியினால் அவருக்குச் சுடவே அது தலைக்கு மேலாற் போனது என்றும் அப்போது அவருடைய மகன் உருத்திரமூர்த்தி பத்மதாஸ் துப்பாக்கியில் போடச் சன்னம் கொடுத்தார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

காலஞ்சென்றவர் இறக்கக்கட்டத்தில் கையெடுத்துக் கும்பிட்டுத் தன்னைக் கொல்ல வேண்டாமென வேண்டினார் என்றும் எனினும் சந்தேகநபர் சுட்டபோது இறந்தவர் கீழே விழுந்தார் என்றும் இறந்தவர் மீண்டும் எழவே மறுபடியும் சந்தேக நபர் சுட்டதைத் தொடர்ந்து அவர் மரணமடைந்தார் என்றும் கூறப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். சி. வி. கே. செல்லத்துரை பிரேதபரிசோதனையை நடாத்தினார். [ஃ]

---

## சட்டவிரோத குடியேற்றக்காரர் கொழும்பு கொண்டுசெல்லப்பட்டனர்

(மாவிட்டபுரம்)

சட்டவிரோத குடியேற்றக்காரர் என சந்தேகிக்கப்பட்டு காங்கேசன்துறை சட்ட விரோதக் குடியேற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட ஏழு பேர் விசாரணையின்பின் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதற்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற் பிராந்தியத்தினுள் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய வள்ளம் ஒன்றை காரைநகர் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். அதில் 7 இந்தியர்களும், இலங்கையர்களும் இருந்தனராம். அத்துடன் வள்ளத்தில் கஞ்சா, சேலைகள், வேட்டி, சால்வைகள், 'இமிட்டேசன்' நகைகள் என்பனவும் காணப்பட்டனவாம்.

மேற்படி பொருட்களும், நபர்களும் யாழ் சுங்க உதவிகலக்டர் திரு. சி. பொன்னையா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது பொருட்களுக், வள்ளமும் பறிமுதல் செய்யப்பட்டு 35,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. பின்னர் இலங்கையர் 8பேரும் இந்தியர்கள் 7 பேரும் காங்கேசன்துறை சட்டவிரோத குடியேற்ற தடுப்பு பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கையர்கள் பிணையில் விடப்பட்டு. இந்தியர்கள் 7 பேரும் விசாரணைக் குட்படுத்தப்பட்ட பின்னர் இந்தியாவுக்கு அனுப்பப்படுவதற்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

---

## விபத்துக்களில் 10 பேர் பலி

புதுடில்லி, மே 23

மகாராஷ்ராவில் 24மணித்தியாலத்திற்குள் நடந்த 3 விபத்தில் 10 பேர் பலியானார்கள். 18 பேர் காயமடைந்தார்கள் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஃ)

---

மார்க் கம்யூ.தலைவர்

## வெங்கட்ராமன் காலமானார்

சென்னை, மே 23

மார்க்கிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. எம். பி. வெங்கட்ராமன் இன்று காலை சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார் அவருக்கு வயது 78. இவர் முன்னாள் கட்சியின் மாநிலச்செயலாளரும், மத்திய கமிட்டி உறுப்பினருமாவார். இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது [ஃ]

# “இனங்களுக்கிடையில் பகைமையைத் தூண்டாதீர்”

## யாழ். சின்னப்பள்ளிவாசல் நிர்வாகச் செயலாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

“[illegible] ஆசிரியப்பணியாற்றும், பல்வேறு இயக்கங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கும் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஒருமுன்னணிக்கட்சியில் அங்கம் வகித்து யாழ் மாநகர சபை உறுப்பினராக விளங்கும் ஜனாப் கே. எம். சாகுல் ஹமீது சபையில் ஆற்றிய உரை அவரது சொந்தக்கருத்து என்று ஜனாப் எஸ். ஏ. கே. கமால்டீன் தெரிவித்திருப்பது வியப்பைத் தருகிறது. அரசியல் லாபம் தேடுவதற்கு யாழ் வாழ் முஸ்லிம்களை ஈடுவைக்க எத்தனித்துள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக்செயலாளர் விடுத்த அறிக்கைக்கு இது ஆலவட்டம் பிடிப்பதாயுள்ளது.

இவ்வாறு ஜனாப் கமால்டீன் என்பவர் 'ஈழநாடு' இதழில் தெரிவித்தகருத்தை ஆட்சேபித்து யாழ். சின்னப்பள்ளி வாசல் நிர்வாகச் செயலாளர் ஜனாப் எஸ். எம். சுல்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கையில் அவர் மேலும் தெரிவிப்பதாவது:

அரசியல் கருத்துக்களில் உடன்பாடு இல்லாமல் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அதற்காக உண்மைக்குப் புறம்பான விஷயங்களைத் திரித்துக்கூறி பல நூற்றாண்டுகாலமாக சமாதானமாகவும் செளஜன்யமாகவும் வாழும் இரு இனங்களுக்கிடையில் பகைமையைவளர்க்கத் தூண்டும் அறிக்கையைக் கரிகாணும் கமால்டீன் உண்மையிலேயே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் விரும்புகின்றாரா? அரசியல் மிலேச்சத்தனத்திற்கும், விஷமத்தனத்திற்கும் சொந்த அரசியல் குரோதங்கள் காரணமாக வக்காலத்து வாங்குவது நாகரிகமுமல்ல; விவேகமுமல்ல.

இந்திய உபகண்டத்தின் சுதந்திரப்போராட்டத்தின் போது அடிப்படை உரிமைகளை இழந்து சுயநிர்ணய அந்தஸ்தை இழந்து அடிமை வாழ்வுவாழ்வதை விடப்பிரிவினைதான் ஐக்கியத்தைப் பேணச்சிறந்த மார்க்கம் என்று பாகிஸ்தானின் சிற்பி முகம்மதலி ஜின்னா போராடி வெற்றிகாணவில்லையா? நாடுகள் பலவற்றில் நிகழ்ந்துள்ள, நிகழ்ந்துவரும் விடுதலைப்போராட்டங்களை, அரசியல் வரலாறுகளை நன்கு அறிந்து விளங்கிக் கொண்டவர்களுக்கு இவை ஒன்றும் புதுமையில்லை.

தீரவிசாரிக்காமல், தான் சார்ந்துள்ள அரசியற்கட்சிக்கு மீண்டு கொடுக்க முனைந்து பன்னெடுங்காலமாக அன்போடும் பண்போடும் வாழும் இனங்களுக்கிடையில் வேற்றுமையை ஏற்படுத்த முயற்சித்துள்ள முஸ்லிம்லீக் செயலாளரது அறிக்கைக்கு வக்காலத்து வாங்கி யாழ். வாழ் முஸ்லிம்களை பணயக்கைதிகளாக்கி விடவேண்டாம். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஒரு கமால்தீன் மாத்திரமல்ல ஒரு சமூகமேபாதிப்புறும்.

யாழ் மாநகரசபை முஸ்லிம் பிரசவவிடுதியில் கிணறு இல்லாத குறையை மிகவும் பெரிதுபடுத்தி ஜனாப் கமால்டீன் சாடியுள்ளார், இப்பிரசவவிடுதிக்கு நிலம்பெறுவதில் ஏற்பட்ட இன்னல்களையும் புறநடையாக சிலநடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால்தான் இப்பிரசவவிடுதியே பிரசவித்தது என்பதையும் நாங்கள் அவ்வளவு எளிதில் மறந்து விடமுடியாது. பிரசவவிடுதி அமைந்துள்ள இடத்தில் நன்னீர் பெறுவது துர்லாபம். எனினும் கிணறு ஒன்று அமைக்கப்படும்வரை மாநகரசபை பிரசவவிடுதித் தேவைக்கென பவுசர் மூலம் நீர்வழங்குகின்றது. ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். அவைகள் தீர்க்கப்படவேண்டியதும் அவசரமும் அவசியமும்தான்.

# கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு

(கொழும்பு)

கைலாசபதி ஞாபகார்த்த முதலாவது சொற்பொழிவினை, சிக்காக்கோ பல்கலைக் கழக பேராசிரியர் ஏ. கே. இராமானுஜம் கொழும்பு ஸ்ரீலங்கா மன்றக் கல்லூரியில் ஜூன் மாதம் 2-ம் தேதி நிகழ்த்தவிருக்கிறார்.

மொழிபெயர்ப்பும் கலாசாரத்தை புரிந்து கொள்ளலும் என்னும் பொருள்பற்றி இச்சொற்பொழிவு இடம்பெறும்.

பத்திரிகைத் துறைக்கு இலக்கியத் துறைக்கும், தொடர்புக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் குறிக்கோளுக்காக அவர் ஆற்றிய கடும் உழைப்பிற்காகவும், தொடர்புக்கும், அபிவிருத்திக்குமான நிலையத்தினர் கைலாசபதி ஞாபகார்த்த சொற்பொழிவை ஏற்பாடு செய்துள்ளனர். (ஈ)

# பெரும்புகழ் விரும்பாத பெரியார்

புலோலி பல துறைகளிலும் கல்வி, வியாபாரம், வர்த்தகம், விவசாயம் ஆகிய இன்னோரன்ன துறைகளில் வளம் பெற்ற ஒன்றாகும். பல தமிழ்ப் பெரியார்களையும், தமிழ் அறிஞர்களையும், புலவர்களையும் தந்த பெருமை தன்னகத்தே கொண்ட சிறப்பு இதற்கும் உண்டு.

தென்புலோலி உபய கதிர்காமம் எனப்படும் சின்னக் கதிர்காமம் என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலம் உண்டு. இதன் வடபாலுள்ள குறிச்சியே புட்டளை ஆகும்.

இக்கிராமத்திலே மேலான குணநடையுள்ளகுடியிலேவை. கந்தப்பர் எனப்படும் பெரியாருக்கு மூத்த தவப்புதல்வராக திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் அவதரித்தார்கள்.

இவர் கல்வி கேள்வி நிரம்பப்பெற்றவர். உயிர்களிடத்து அன்புடையவர். இன்சொல் பேசுபவர். பணிவும் பக்தியும் உடையவர். எவருக்கும் உதவி செய்யும் சுபாவம் கொண்டவர். எளிமையானவர். தூய்மையானவர். நல்லொழுக்கம் பூண்டவர். ஏழை எளியவர்களை ஆதரிப்பவர். அமைதியானவர். எண்ணித்துணியும் கருமம் ஆற்றும் கருமவீரர். நியாய சிந்தை உடையவர். மற்றவர்கள் கருத்திற்கு மதிப்பளிப்பவர். ஆமை போன்ற அடக்கமுடையவர். அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் அற்ற சான்றாண்மை பொருந்தியவர். பெயர், புகழ், பிரச்சாரம் விரும்பாதவர்.

இவரைஊர்மக்கள் மந்திகை போஸ்ட்மாஸ்டர் கணபதிப்பிள்ளை என்று அழைப்பர். ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் தர்மகர்த்தா சபையின் கீழ் வந்தபின் அதன் உயிர் நாடியாக நின்று அல்லும் பகலும் தம் மெய்வருத்தம் பாராது உழைத்தவர். சமய வாழ்க்கையில் தமது இறுதிக்காலத்தை ஈடுபடுத்தி வந்தார். தன் வியாபாரத்தலம், குடும்பம், தனது காலம் ஆகியவற்றைக் கவனியாது திருமாலின் பெரிய தாசனாய், அடியாரை மாறித்தன் சேவைப்பணிகளைத் திறம்படச் செய்துவரலாயினார். நம்பிக்கை என்ற பெயரைப் பெற்றவர். இவரை நம்பி நிதி, கோவில், புனருத்தாரண வேலைகட்குப் பாய்ந்து ஓடிவரலாயிற்று. அன்பர்கள், அடியார்கள் பக்தர்கள் உள்ளூரில் இருந்தும் பிற ஊர்களில் இருந்தும், பிற நாடுகளிலிருந்தும் அள்ளி அள்ளிக் கொடுக்கத் தொடங்கலாயினர்.

கண்ணபிரானின் அடியானை கிருஷ்ணபக்தனை கண்ணே சென்ற சித்திரை மாதம் 24-ம் திகதி 63-ம் வயதில் தனதாள் அடையச் செய்துவிட்டார். ஞாயிறு காலை வழக்கம் போல ஸ்ரீவல்லிபுர கிருஷ்ணாழ்வார் கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வந்தவர் சிறிது நேரத்தற்குள் சுகவீனப்பட்டு இப்பூவுலகில் புகழுடம்பை விட்டுச் சென்றுவிட்டார். இத்தகைய பெரியாரை, தொண்டனை, அன்பனை எப்போது காண்போம்!

த. மார்க்கண்டு,
அல்வாய்.

# ‘ராஜராஜேஸ்வரம்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

டாக்டர் ஐயாத்துரை கருணானந்தனின் "ராஜராஜேஸ்வரம்" பெரியகோயில் சம்பந்

(8-ம் பக்கம் பார்க்க)



## திருக்குறள் மகாநாட்டுக்கு இளஞ்சேரனார் வருகிறார்

(மண்டைதீவு)

தமிழ்நாடு பெருங்கவிக்கோ புலவர் இளஞ்சேரனார் இம்மாதம் 26ம் திகதி இலங்கை வரவுள்ளார்.

மண்டைதீவில் நடைபெறும் உலகத் தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இவர் இலங்கை வரவிருப்பதாகத் தமிழ்மறைக் கழகத்தின் செயலாளர் புலவர் தி.சிவசாமி தெரிவித்தார்.

இம்மாதம் 27,28,29ம் திகதிகளில் மண்டைதீவில் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டிலும் வேறுபல நிகழ்ச்சிகளிலும் புலவர் இளஞ்சேரனார் கலந்து கொள்ள இருக்கிறார்.

(வள-நிரு)

## சுங்க விசாரணையில் கப்பல்களின் காப்டன்கள்

(திருமலை)

திருமலையில் கடத்தல் பொருட்களுடன் கைப்பற்றப்பட்ட இரு கப்பல்களும் மீன்பிடித் திணைக்களத்தின் அனுமதியுடன் திருமலைப் பகுதியில் கடந்த 6 மாதகாலம் மீன்பிடிப் பயிற்சியில் ஈடுபட்டு வந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

தமது இரு கப்பல்களும் பழுதடைந்ததால் அவற்றை திருத்தவே தமது நாட்டுக்குப் புறப்படத் தயாரானதாகக் கப்பல் காப்டன் தெரிவித்துள்ளார்.

திருமலை சுங்க அதிகாரி ரி. வி. எஸ். ராஜசூரியர், உதவிக் கலக்டர் எஸ் விவேகானந்தன் ஆகியோர் தலைமையில் சென்ற சுங்ககோஷ்டியினரே இக்கடத்தலைக் கண்டுபிடித்தனர்.


மீன்வலைக்குள் கடத்தல் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைச் சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்தனர்.

இரத்தினக்கற்களின் சரியான

[7 பக்கம் பார்க்க]


# உங்கள் குழந்தையின் காலை வேளையை இன்ஸ்டன்ட் நெஸ்பிறேயுடன் ஆரம்பியுங்கள்

மூன்று மேசைக் கரண்டி...



இன்ஸ்டன்ட் நெஸ்பிறேயை

ஒரு கிளாஸ் சூடான...




அல்லது ஐஸ் குளிரான...



நீரில் கலவுங்கள்.

நான்கு விநாடிகள் கரைத்ததும்



கிறீம் சுவையும் போஷாக்கும் நிறைந்த ஒரு கிளாஸ் பால் கிடைத்துவிடும்.

உங்கள் பிள்ளைகள் இன்ஸ்டன்ட் நெஸ்பிறேயின் சுவையை நிச்சயம் விரும்புவார்கள். அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி கண்டு நீங்கள் பூரிப்படைவீர்கள்.

ஒன்று...இரண்டு...மூன்று...நான்கு விநாடிகளில் பால் தயாராகிவிடும்!






ரூ.85/=

இன்ஸ்டன்ட்

நெஸ்பிறே

Nestlé

நெஸ்லே வழங்கும், வளரும் பிள்ளைக்கு வாய்த்த பால்

Grant K & E 4942

## இன்று

(புலோலி)

தெல்லிப்புலோலியூர் புற்றளை சித்திவிநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று நடைபெறுகின்றது.

இன்றைய தினம் பகல் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்குகளால் விஷேட அபிஷேகமும் பூசைகளும் நடைபெறவுள்ளன. இரவு "வினைநீக்கும் வித்தகன்" என்னும் விடயம் பற்றி திருமதி வசந்தா வைத்தியநாதனின் சொற்பொழிவும், உடுப்பிட்டி வானம்பாடிகள் குழுவினரின் "சுந்தன் கல்யாணம்" வில்லிசையும் இடம்பெறும்.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
M.G.R.-சரோஜாதேவி
தாயைக்காத்த தனயன்
புதிய பிரதி

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30 630,
இரவு 9-30
கமலஹாசன் (இருவேடம்)
தங்கவேலு
கடல் மீன்கள்
(புதிய பிரதி-ஈஸ்மன் கலர்)

ரீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்.
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சுமித்திரா
சங்கிலி

## இன்றைய பலன்

வைகாசி 10-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(24-5-83)

மேடம்: முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

இடபம்: நீண்டநாள் பிரச்சனையில் இன்று சமரச முடிவு காணப்படும், மற்றவர்களின் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள், அரசியலில் சிலருக்கு ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்

கடகம்: பொருளாதார நிலை சீரடையும், சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு, பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம், வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

வெஸ்லி (சாவிப்பாய்)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயிறு 1-80
அரசிளங்குமரி

சிம்மம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடல்நலம் பாதிக்கப்படலாம், வீண்பொருட்களினால் பணம் விரயமாகும், வியாபாரயிகள் கட்டுப்பாடுத் தொழில் செய்யவும்.

கன்னி: மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும், ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழப்பீர்கள்.

துலாம்: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள், சுற்றுடலில் சாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்

விருச்சிகம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கட்டறொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

தனுசு: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும், செல்வாக்குப் பெருகும் வாக்குப்படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று கைகூடும்.

மகரம்: தெளிந்த மனம், தெய்வசிந்தை, தேடியது கிடைக்கும், அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு. நேர்முகப்பரீட்சைக்கு உகந்த தினம், தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்: தவறுகள் நடக்கும், நிலையும் தடுமாறும், எதிரிகள் ஏக்காளமிடுவார்கள் மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், நாள்எல்லாம் அலைச்சல், உடல்மெலிவு தோன்றும்.

மீனம்: பசுமையான எண்ணங்கள் நெஞ்சில் அலைமோதும், காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம் களவிரவழியால் லாபமுண்டு, சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்பை ஏற்படுத்திக் கொள்வார்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
கமலஹாசன்
ரதி
உல்லாசப்பறவைகள்
வெகு விரைவில் சகலகலா வல்லவன்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
தர்ம யுத்தம்
27 முதல் அன்பே வா

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்
சம்பூர்ண
ராமாயணம்

ஸ்ரீதர்
(யாழ். நகர்)
தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.30
Walt Disney's
HERBIE GOES BANANAS
(Family Entertainment)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
A soldier of fortune and his trained assistants rescue a girl held captive in a Remote Island.
Action packed Karate Film.
FORCE FIVE
(Adults Only)
From the team that gave you "ENTER THE DRAGON" and "BATTLECREEK BRAWL"

சாந்தி - (யாழ். நகர்) 2-வது வாரம்
10-30, 2-30, 6-30, 9-45
தியாகம்
ஈஸ்ட்மென் கலர்
சிவாஜி, லக்ஷ்மி, மேஜர், தேங்காய், நாகேஷ் மனோரமா
வி. கே. ராமசாமி

## குடிநீர் விநியோகம்பற்றி புகார்

(நெடுந்தீவு)

யாழ் சமூக சேவைகள் பகுதியால் இங்கு தனியார் துறையினர் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் சீராக நடைபெறுவதில்லையாம். தொட்டிகளுக்கான அளவுகளும் வெகுவாகக் குறைக்கப்படுகிறதாம். நெடுந்தீவு மத்தி கிராமோதயசபைத்தலைவர் மத்திகிராம அபிவிருத்திச் சங்கம் தொட்டி மேற்பார்வையாளர்கள் ஆகியோர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் இதுபற்றிப் புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது. (வி)

## சுங்க விசாரணையில்....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதிபற்றி நிர்ணயிப்பதற்கு இரத்தினக்கல் மதிப்பீட்டு நிபுணர் திருமலைக்கு வந்துள்ளார்.

சுங்கப்பகுதி விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. கப்பல்களில் இருந்த 13 மாலுமிகளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய வீரர்கள் தினம்:

## நான்கு முத்திரைகள் வெளியிடப்பட்டன

[கொழும்பு]

தேசிய வீரர்கள் தினத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் ஐம்பதுசதம் பெறுமதியானநான்கு முத்திரைகள் வெளியிடப்பட்டன.

வண. பிதா எஸ். ஜி. பெரேரா கி. ஏ. லோறன்ஸ், எம். எச். எம். அப்துல்காதர், எச். டபிள்யூ. அமரசூரிய ஆகியோரின் நினைவு முத்திரைகளே நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டவையாகும்.

தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை வெளியீட்டு விழா ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

மூன்று முத்திரைகளை தபால், தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. டி. பி. விஜேதுங்கா கொழும்பு பெரிய தபால் கந்தோரில் வெளியிட்டுவைத்தார்

மற்றைய முத்திரை காலி தபால் கந்தோரில் வைத்து விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவினால் வெளியிடப்பட்டது. [வெ]

## "பிறந்த மண்ணை மறக்காமல் செய்துள்ள பெரிய பணி"

(உரும்பராய்)

திரு. மார்க்கண்டு செல்லத்துரையும் திரு. முத்துசெல்வத்துரையும் உடன் பிறவாத இரட்டையர்கள் ஒத்த மனம் பான்மையுடைய தூய நண்பர்கள் திரு மார்க்கண்டு செல்லத்துரை உரும்பராய் பர்வத பத்தினி அம்மன் கோயிலில் சென்ற ஆண்டு ஆரம்பித்து வைத்தஉள்வீதி மண்டபத்தை விஸ்தரிக்கும் பணியில் ஈடுபட முனைந்தவர் திரு. முத்து செல்வத்துரை இருவர் செல்வத்துரைகளும் மலேசியாவில் ஒட்டி உறவாடி அருகருகு வாழ்வதுபோல அவர்களால் எடுக்கப்பட்ட கோட்டைத் திருப்பணியும் உரும்பராய் பர்வத பத்தினி அம்மன் கோயிலில் அருகருகாக அமைந்திருப்பதும் ஒரு தனிச் சிறப்பேயாகும் திரு. முத்துசெல்வத்துரை பொருள் கவருத திருப்பணி உரும்பராயில் இல்லையென்றே கூறலாம்.

உரும்பராய் பர்வத பத்தினி அம்மன் கோயில் புதிய மண்டபத் திறப்பு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இணுவில் நாதஸ்வர வித்துவான் திரு. ஆர் சிவபாதசுந்தரம் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் தொடங்கிய இவ்விழாவில் மங்கல விளக்கேற்றிய மில்க்வைற் தொழிலக அதிபர் திரு. க. கனகராசா பேசுகையில் கூறியதாவது பணிகளிற் சிறந்தது தெய்வப் பணி இந்தப் பணியில் ஈடுபடுவது எல்லார்க்கும் கிடைக்காது ஒரு சிலருக்கே கிடைக்கும் அதற்கும் தனம் வேண்டும் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டு மலேசியாவில் வாழ்ந்து வரும் திரு முத்து செல்வத்துரை தெய்வ கைங்கரியங்களில் ஈடுபடுபவர் அவர் உரும்பராய் பர்வத பத்தினி அம்மன் கோயிலில் அடியார்களின் வழிபாட்டுக்கு உகந்த முறையில் பெரும் பொருட் செலவில் அழகிய தொரு மண்டபத்தை அமைத்திருப்பது தெய்வீகமானது.

மங்களவிளக்கேற்றும் வைபவத்தில் திருமதி நாகம்மா கனகராசாவும் பங்குபற்றினார்

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) பேசுகையில் கூறியதாவது.

திருவருள் தூண்ட ஓடி ஓடித் தொண்டுசெய்தார்கள் நாயன்மார்கள் அதனால் அவர்கள் அருள் வசத்தர்களாகிச் செய்த அற்புதங்கள் அநேகம். திருத்தொண்டு செய்வதற் குப் பூர்வபுண்ணியம் வேண்டும். திரு. மார்க்கண்டு செல்வத்துரையும் திரு. முத்துசெல்வத்துரையும் மலேசியாவில் வாழ்ந்தாலும் தாம் பிறந்த மண்ணை மறந்து போகாமல் மிகப்பெரிய பணியாக பர்வத பத்தினி அம்மன் ஆலயத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இத் திருமண்டபத்தை அமைத்தார்கள் என்பதை அறியும் போது உள்ளம் பூரிக்கின்றது. பர்வதபத்தினி அம்பாளின் திருவருள் அவரைப்பெற்றவர்களுக்கு யாதுமோர் குறை வில்லை.

கட்டடக் கலைஞர்களும் பாராட்டிப் பரிசில்களை திரு. வே. செல்லையா வழங்கியதை அடுத்து ஆலய நிர்வாக சபையின் தனாதிகாரி திரு. பொ. ஸ்ரீநடராசா நன்றி தெரிவித்துப் பேசினார் சிறப்பு நிகழ்ச்சியாக தேவார இசைமணி தாவடியூர் இராசையா திரு ஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி ஈற்றில் இடம் பெற்றது.

## வெசாக் விழா

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா சமித்தியில் புத்தபெருமான் ஞானம்பெற்ற தினமாகிய 'வெசாக் விழா' இம்மாதம் 26-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் விசேட ஆராதனைகளும் பஜனைகளும் இடம்பெறவுள்ளன. பகவான் ஸ்ரீசத்திய பாபா சமய வேறுபாடின்றிச் சகல மதவிழாக்களையும் கொண்டாடும்படி பக்தர்களைக் கேட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மின்சார வேலைகள் பூர்த்தியாகவில்லை

[அச்சுவேலி]

அச்சுவேலிக் கிராமோதய சபைப் பகுதிக்குக் கோப்பாய் எம். பி யினால் 1982-ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்மூலம் ஒதுக்கப்பட்ட மின்சாரவேலைகள் பல பூர்த்தியாக்கப்படாத நிலையிலுள்ளன. குறிப்பிட்ட வீதிகளுக்கான மின்கம்பங்களை அச்சுவேலிக் கிராமோதய சபை நட்டுக் கொண்டு, நிமிர்த்தி சிரமதானப் பணிமூலம் செய்து கொடுத்த போதிலும் அதிகாரிகளின் அசிரத்தைப் போக்கினால் இன்னும் மின்கம்பங்களுக்கு வயர் இணைப்புகள் செய்யப்படாதுள்ளன. இது சம்பந்தமாக அச்சுவேலிக் கிராமோதயசபை மாவட்ட அபிவிருத்தி சபை அச்சுவேலி உப அலுவலகத்துக்குப் பலமுறை முறையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இதனைக்கண்டித்து அச்சுவேலிக் கிராமோதய சபைத் தலைவர் திரு. க. இராசதுரை மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

## அண்ணாமலை

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

யில் நிற்கும்.

"இளைஞர் குழுக்களின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அரசியல் ரீதியில் சரண்டைவாழ்பவர்களுக்கே உதவிசெய்யும்."

# யாழ். நகர் வீதிகளெங்கும் உயிராபத்துக் கிடங்குகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப்பகுதியிலுள்ள வீதிகளில் தொலைதொடர்புகம்பிகளைத் தாழ்ப்பதற்காக வெட்டப்படும்கிடங்குகள் உயிராபத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

பல இடங்களில் இதனால் பலரும் காயங்களுக்குள்ளாகியிருப்பதாகப் புகார்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒருமாதமாக இந்த வேலைகள் யாழ்ப்பாணத்தில் பலவீதிகளில் நடைபெற்றுவருகின்றன. வாகனங்கள் வரும்போது பாதசாரிகள் ஒதுங்க இடமில்லாமல், சில சமயங்களில் கிடங்குகளுக்குள் விழவேண்டிய ஆபத்தானநிலைமை ஏற்படுகின்றது. ஒரே நேரத்தில் சைக்கிள்களும் வாகனங்களும் வரும்போது பெருந்த கஷ்டங்களுக்குள்ளாகின்றன.

இந்தக்கிடங்குகளை வெட்டும்போது எவ்வித அபாய அறிவிப்புகளையும் எச்சரிக்கைகளையும் போடாமல்விடுவதாலேயே இவ்வித நிலைமைக்குள்ளாக வேண்டியுள்ளது.

அரசடிவீதியிலுள்ள ஒரு இடத்தில் ஒருமாணவி சைக்கிலுடன் கிடங்கில் விழுந்து அவரது கைமுறிந்தது. வேறு ஒருவர் நாவலர் வீதி, வைமன்வீதி சந்தியிலிருந்த கிடங்கில் இருட்டில் விழுந்து காலைமுறித்துக் கொண்டார். பிரவுண்வீதியில் ஒருவர் விழுந்து காயத்திற்குள்ளானார். ஒருதினம் வண்ணை ஐயனார் கோவிலடியில் ஒரு பஸ் கிடங்கில் பாய்ந்து நின்றது. தெய்வாதீனமாக யாருக்கும் காயமேற்படவில்லை;

வீதிகளெங்கும் கிடங்குகளை வெட்டிக்கொண்டே போகிறார்கள். எங்கும் கிடங்குமயம், மூடும்வேலை மந்தமாகவே உள்ளது. கிடங்குகளைச்சுற்றி ஏதாவது தடைகளை வைத்திருந்தாலாவது விபத்துக்களை தவிர்க்கக் கூடியதாயிருக்குமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

கிடங்குகளை வெட்டி உடன் வேலையை முடிக்காமல் நாட்கணக்கில் இழுத்தடிப்பது பெருந்த கஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபை இதுசம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கேட்கிறார்கள்.

## துப்பாக்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லுள்ள கிடுதிக்குச் சென்றனர் இதற்குமுன் அவர்கள் சத்தம் கேட்டு விழித்தெழுந்த கிருஷ்ணபிள்ளை என்பவர் எழுந்து தனது துப்பாக்கியை எடுத்து ஜன்னல் வழியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்தார் அப்போது கொள்ளையர்கள் யாவரும் சிதறி ஓடி பற்றை மறைவில் ஒளித்திருந்து அந்த வீட்டைநோக்கி தாமும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். பின்பு கொள்ளையர்கள் யாவரும் தப்பி ஓடினார்கள்.

காலையானதும் மாங்குளம் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டியுடன் மாங்குளம் பொலி

## கிடுகுகள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கந்தர்மடம் அகதிகளுக்குக் கிளிநொச்சியிலிருந்து 2,000 கிடுகுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்து, கிறிஸ்தவ மற்றும் சமூக நலஸ்தாபனங்கள் தொகுதி எம்.பி திரு வி. ஆனந்தசங்கரி தலைமையில் இவற்றைச் சேகரித்து அனுப்பின. மேலும் 3,000 கிடுகுகள் சேகரிக்கும் வேலையில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சாரும் வவுனியா உதவிப் பொலிஸ் அதிபரும் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், பலத்த தேடுதல் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## மட்டக்களப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புறக்கணிக்கப்பட்டு பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 56 பேர் தொழிலாளர்களாக நியமனம்பெற்றுள்ளனர்.

"மட்டக்களப்புகளப்பகுதி காவலாளிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் உள்ளூர் வாசி இருவரை சிபார்சு செய்திருந்தபோதிலும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் காவலாளிகளாக நியமனம்பெற்றுள்ளனர் இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்பில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள் இதனால் இங்கு வேலையில்லாப் பிரச்னை தீரப்போவதில்லை சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(க-அ)

## காந்தியம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டி. சிவா முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

மேற்படி ஆட்சேபமனுவுக்கு எதிர்மனு தாக்கல்செய்யவும் சட்டத்தரணிகளின் விவாதத்துக்குமென இம்மாதம் 30ம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

## யாழ். நகர் வழமைக்குத் திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

தேர்தலைத் தொடர்ந்து அமைதியாகவும் வெறிச்சோடியும் கிடந்த யாழ்ப்பாண மாநகரம் நேற்று சனநடமாட்டம் அதிகரித்துக் காணக்கூடியதாக இருந்தது.

நிலைமை வழமைக்குத் திரும்பும் அறிகுறிகள் தென்பட்டாலும் பலரது முகத்தில் அச்சமும் பீதியும் கலந்தே காணப்பட்டது.

பொருள்களை வாங்கிச் செல்வதில் மக்களிடையே மிக்க சுறுசுறுப்புக் காணப்பட்டது

(மானி-நி)

## புனர்வாழ்வுக் கழகமும் உதவியளிக்கும்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தினத்தன்று இராணுவத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட கந்தர்மடம் பகுதி மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

கொழும்பிலும் பல பகுதிகளிலும் அகதிகளான மக்களுக்குக் கை கொடுத்து உதவிய தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கந்தர்மடத்தில் அகதிகளாகித்துயரமுடன் வாழ முடியாது தவிக்கும் மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. விரைவில் அகதிகளைத் தனித்தனியாக சந்தித்து முழு விபரமும் சேகரிக்கப்படவுள்ளது. (அ)

## பல்கலைமாணவர் அவைப்பொறுப்பில் 'தமிழ் அகதிகள் நிதி' ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை பொறுப்பில் 'தமிழ் அகதிகள் நிதி' ஆரம்பிக்கப்படவேண்டுமென்று, பல சமூக சேவை இயக்கங்களும், கழகங்களும், நிறுவனங்களும் விடுத்த வேண்டுகோளை யாழ். பல்கலைக்கழகமாணவர்அவைகொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதற்கான அங்கீகாரம் பெற்றதும் 'தமிழ் அகதிகள் நிதி' ஆரம்பிக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழகமாணவர் அவைத் தலைவர் திரு க.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

கந்தர்மடத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளான குடும்பங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் அன்று தொடக்கம் தமது விரிவுரைகளுக்கும் செல்லாமல் முழுமூச்சாக ஈடுபட்டுப்பூர்த்தி செய்துள்ளனர்.

மாணவரவைமேற்கொண்ட சேவைகளுக்குத் தமிழ்மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியதற்கு மாணவர் அவைத்தலைவர் நன்றி தெரிவித்தார்.

(மா-அ)

## புதிய மாநகர, நகரசபைகள்: ஜூன் 16-ல் முதலாவது கூட்டம்

(கொழும்பு)

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாநகரசபைகள், நகரசபைகள் ஆகியவற்றின்முதலாவது கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 16ம் திகதி நடைபெறுமென்று பிரதமமந்திரியும், உள்ளூராட்சிசபைகள், வீடமைப்புதுறை அமைச்சருமான திரு ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

மாநகரசபைகள் நகரசபைகளுக்குத்தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## மரண அறிவித்தல்

### திருமதி சீதாலக்ஷ்மி சங்கரப்பிள்ளை

தெல்லிப்பளையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சீதாலக்ஷ்மி காலமானார் இவர் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், பரமநாதன், சுப்பிரமணியம், தையல்நாயகி, சௌந்தரநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, ராதா, செல்வராசா, சிவராசா ஆகியோரின் அருமை மாமியும் சங்கர், துஷ்யந்தன், ராஜமனோகரன், சங்கீதா, காயத்ரி, லக்ஷ்மிராஜ் ஆகியோரின் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (24-5-83) மாலை 4 மணியளவில் தெல்லிப்பளையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 7343

## சென்னையில் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய திரு கே.ஏ. சுப்பிரமணிய ஐயர் சென்னையில் காலமானார்.

கடந்த 13ம் திகதி காலமான அவருக்கு 77 வயது அவரது மூத்த புதல்வர் சென்னையில் இருந்து வெளிவரும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்து வருகிறார்.

## ராஜராஜேஸ்வரம்...

[5ம்- பக்கத் தொடர்ச்சி]

தமான நூல் வெளியீட்டு நிகழ்ச்சி 26-ம் திகதி மாலை 5 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

யாழ் சைவமகளிர் மன்றத்தின் ஆதரவில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் இந்துக்கல்லூரி அதிபர் திரு. A. சபாலிங்கம் தலைமை வகிப்பார் பேராசிரியர் கே. இந்திரபாலா, கம்பன்கழக அமைப்பாளர் திரு A ஜெயராஜா. ஆகியவர்கள் ஆகியவர்கள் சிறப்புரையாற்றுவர்.

## மட்டுநகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பவம் நடந்த சமயம் இரண்டாம் காட்சி படம் பார்க்கச் சென்றதாகவும் இரவு பதினொரு மணிபோல் மனேஜர் தன்னிடம் ஜீப் எரிக்கப்பட்ட விபரத்தைச் சொன்னதாகவும் தான் பயத்தினால் கண்ணகை அம்மன் கோவிலில் ஒழிந்ததாகவும் காவலாளி பொலிஸாரிடம் தெரிவித்தார்.

காவலாளி கோர்ட்டில் நேற்று ஆஜராக்கப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்

புதூர் என்ற இடத்தில் கார் ஒன்று கொளுத்தப்பட்டது சம்பந்தமாக குறிப்பிட்ட காரில் வந்த தவராஜா என்பவரை பொலிஸார் மீண்டும் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் டபிள்யு. ஜி மெண்டிஸ் விசாரணைகளை நடாத்தி வருகிறார்

## இன்று வில்லுப்பாட்டு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை திரு வி.வி.கே.ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு இடம்பெறும்.

(ம)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

உசன் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா உற்சவம் நாளை [புதன்கிழமை] காலை இடம்பெறவுள்ளது.

(சு)

★

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு இலந்தைத் தாழ்வு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. இதனையொட்டி விசேட மேளக்கச்சேரிகளும் இடம் பெறவுள்ளன.

## வீரசோழி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வளர்ச்சியைத் தம்வாழ்க்கை நலத்தின் வளர்ச்சியெனக் கொண்டவருமாகிய திவான் பகதூர் ச. பவானந்தம்பிள்ளை அவர்கள், ISOFRHS. (London) MRAS (London) பதிப்பிக்க முயன்றார்கள்......"

(தொடரும்)

## மரண அறிவித்தல்

### திருமதி வெலிச்சோர்பிள்ளை ஞானமுத்து

நெல்லிடி கரவெட்டி மேற்கு திருமதி வெலிச்சோர்பிள்ளை ஞானமுத்து காலமானார் இவர் காலஞ்சென்ற வெலிச்சோர்பிள்ளையின் மனைவியும், திருமதிகள் இசபெல்லா மனுவேற்பிள்ளை, மரியமுத்து செபஸ்ரியன். சந்திராப்பிள்ளை, திருமதிகள் எலிசபெத் இக்னேஷியஸ் [இளைப்பாறிய ஆசிரியை], அக்னஸ் பேரின்பநாயகம் (ஆசிரியை சென் பீற்றேர்ஸ் கல்லூரி பம்பலப்பிட்டி]. அருட்செல்வி மேரி பிடிலிஸ் A. C. [அதிபர் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி], காலஞ்சென்ற ஜோசப் (இலங்கை மத்திய வங்கி கொழும்பு) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சவரிமுத்து மனுவேற்பிள்ளை, தன்னாமுனை இளைப்பாறிய அதிபர் வி. ரி. செபஸ்ரியன், இளைப்பாறிய கி. டபிள்யூ. ஈ. உத்தியோகஸ்தர் இக்னேஷியஸ், ஜி. பேரின்பநாயகம் [O. A. உள்ளூராட்சி அமைச்சு], திருமதிகள் சந்திராப்பிள்ளை பாக்கியம், ஈ ஜோசப் [ஆசிரியை பொரளை], ஆகியோரின் மாமியாரும், ம. அ. தேவநாயகம் (நிர்வாகி செயின்ஸ் கல்வி நிலையம்). ம. மன்மதநாயகம் (உரிமையாளர் மனுவல் பிள்ளை அன் சன்ஸ் நெல்லியடி] ஆகியோரின் பேத்தியாரும் ஆவர். பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை [24-5-83] பிற்பகல் 4 மணிக்கு நெல்லியடிமரியநாயகி மாளிகையிலிருந்து சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 7342

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber g. 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.